மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு தற்போது கைவிடப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் அரசு கணக்கில் திருப்பி செலுத்தப்பட்ட தொகை – ரூ.26.95 லட்சம் தொகையை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியாக விடுவித்தல்.

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி.1) துறை

அரசாணை (நிலை) எண்.71 நாள்:19.5.2008.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.156, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை, நாள் 27.10.2006.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.84268/06/ஜி–2, நாள் 28.1.2008.

**ஆணை**

படிக்கப்பட்டவையின் இரண்டில் காணும் கடிதத்தில், 2005–06 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு தற்போது கைவிடப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்படுத்தாமல் நிலுவையில் உள்ள தொகையினை பல்வேறு பணிகளை செயல்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியாக (Collector's Discretionary Fund) வழங்கி படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையில் உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்தில் நமது கிராமம் திட்ட நிதி ரூ.3.65 லட்சம், கச்சா வீடுகள் மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.15 லட்சம் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்ட நிதி ரூ.8.30 லட்சம் ஆக மொத்தம் ரூ.26.95 லட்சம் பயன்படுத்தாத நிதி இருந்து அவை அரசு கணக்கில் 14.2.07ல் திரும்ப செலுத்தப்பட்டது என்றும் மேற்கண்ட மூன்று திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தாமல் அரசு கணக்கில் திரும்ப செலுத்தப்பட்ட தொகையான ரூ.26.95 லட்சத்தை ''விருப்புரிமை நிதியாக'' அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு வழங்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார் எனவும் இத்தொகையான ரூ.26.95 லட்சத்தை தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ''விருப்புரிமை நிதியாக'' அரசாணையில் குறிப்பிட்டுள்ள அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு புதிதாக விடுவித்தும், அரசு அனுமதி அளிக்கவும், இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யவும், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவினத்தை மேற்கொள்ளவும் ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

> 2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 800 –ஏனைய செலவு – KR.அடிப்படை வசதிகளுக்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு விருப்புரிமை மான்யம்.09. உதவி மான்யங்கள் 09. ஏனையவை. (DPC 2515-00-800-KR-0997)

மேலும், இந்தத் தொகையை சென்னை, சம்பள கணக்கு அலுவலக (தெற்கு)த்திலிருந்து பெற்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்குவதற்கும் தமக்கு அதிகாரம் அளித்து ஆணையிடுமாறும் அரசைக் கேட்டுள்ளார்.

2. மேலே பத்தி 1ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, அதன்படி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மூன்று திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தாமல் அரசு கணக்கில் திரும்ப செலுத்தப்பட்ட ரூ.26,95,000/– (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) தொகையினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியாக அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 800 –ஏனைய செலவு – KR. அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான விருப்ப மானியங்கள்.09. உதவித் தொகை 09. ஏனையவை. (DPC 2515-00-800-KR-0997)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ''புது துணைப்பணி'' குறித்ததாகும்.(New Instrument of Service). இச்செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு மூலம்

மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.தி.பொ.I)த் துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வ.செ.தி.பொ .I)த் துறைக்கு இவ்வாணையின் நகலுடன் இரு படிகளில் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2008–09ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய கருத்துருக்களை அரசின் நிதித்துறைக்கு உரிய காலத்தில் தவறாமல் அனுப்பி வைக்குமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இக்கணக்குத் தலைப்பிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 132/DS(APA)/08 நாள் 19.5.2008ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. மற்றும் இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண்.110 (நூற்று பத்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்